# DINAMALAR 18.03.2023

## தாவரவியல் பூங்காவில் விரைவில் 'க்யூ.ஆர்., கோடு' அறிமுகம்!

**கோவை, மார்ச், 18–**

வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவில், மரங்களுக்கு க்யூ.ஆர்.,கோடு தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

ஆர்.எஸ்.புரம் ரோட்டில் அமைந்துள்ள, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் தாவரவியல் பூங்கா(பொட்டானிக்கல் கார்டன்) மொத்தம், 3.30 ஹெக்டர் பரப்பில் அமைந்துள்ளது. இப்பூங்காவில் 100 வகையான மரங்கள், 40 வகையான மூலிகைச் செடிகள், 25 வகையான ஆர்க்கிட்கள், 50 வகையான சிறு தாவரங்கள், சில மூங்கில் வகைகள் பராமரிக்கப்படுகின்றன.

கோவை மாவட்டத்திலேயே மரங்களுக்கென இருக்கும் தாவரவியல் பூங்கா இது ஒன்றுதான். ஆராய்ச்சி பயில்வோருக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இந்த பூங்கா விளங்குகிறது.




■ தாவரவியல் பூங்காவில் உள்ள மரங்களின் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒவ்வொரு மரத்துக்கும் அதன் அறிவியல் பெயர், பொதுவான பெயர் அடங்கிய பலகை ஒன்று மரத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், ஒவ்வொரு மரங்களின் சிறப்பை தெரிந்து கொள்ளும் விதமாக, க்யூ.ஆர்.,கோர்டு தொழில்நுட்பம் பொருத்தப்படவுள்ளது.

இதுகுறித்து, வன சூழலியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன தொழில்நுட்ப அதிகாரி செந்தில் கூறுகையில்,"கோவை மாவட்டத்திலேயே மரங்களுக்கென இருக்கும் தாவரவியல் பூங்கா இது ஒன்றுதான். ஆராய்ச்சி பயில்வோருக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக விளங்கி வருகிறது. எனவே, பூங்காவை மேம்படுத்தும் விதமாக, மரங்களின் பெயர், அவற்றின் குடும்பம், அதன் சிறப்புகள் மற்றும் எந்தெந்த பகுதிகளில் அதிகம் வளர்கிறது என அனைத்து தகவல்களும் தெரிந்துகொள்ளும் விதமாக க்யூ.ஆர்.,கோடு தொழில்நுட்பம் பொருத்தப்படவுள்ளது.

"இதன்மூலம், மாணவர்கள் தங்களது மொபைலில் ஸ்கேன் செய்தாலே ஒவ்வொரு மரத்தை பற்றியும் எளிதில் தெரிந்து கொள்ள முடியும்," என்றார்.